**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**
**கொழும்பு**

**ஊடக அறிக்கை**

**பாரதத்தை அறிந்து கொள்ளுங்கள் புதிர் போட்டியில் கலந்து பரிசில்களை வெல்லுங்கள்**

“பாரதத்தை அறிந்து கொள்ளுங்கள்’’ புதிர் போட்டி இந்திய அரசாங்கத்தால் ஏற்பாடு செய்யப்படுகின்றது. அது இந்திய மற்றும் வெளி நாட்டைச் சேர்ந்த இருவர்களுக்குமானது. நீங்கள் www.bharatkojaniye.in எனும் இணையத்தள முகவரியில் 15 செப்டெம்பர், 2018 இற்கு முன் பதிவு செய்து கொள்ளலாம். போட்டியின் முதலாவது சுற்று செப்டெம்பர் 16 இலிருந்து செப்டெம்பர் 30, 2018 வரை அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. பங்குபற்றுதல் இலவசம்.

பதிவு செய்தல், விண்ணப்பம் மற்றும் வழிகாட்டல்கள் தொடர்பான அனைத்துத் தகவல்களும் www.bharatkojaniye.in. எனும் இணையத்தளத்தில் கிடைக்கப் பெறலாம். புதிர்ப் போட்டியின் தலைப்புகள் - இந்தியக் கலை, இந்திய ஜனநாயகம், பொருளாதாரம், பூகோளம், இசை மற்றும் நடனம் தொடர்பான ஆளுமைகள், விஞ்ஞானம் & தொழில்நுட்பம், மொழிகள் & இலக்கியம், கல்வி, இந்தியக் கைவினைப் பாரம்பரியம், இந்திய சினிமா மற்றும் பிரசித்தமான நபர்கள் என்பவற்றை உள்ளடக்கும். முழுப் போட்டியுமே 4 சுற்றுகளில் அமைக்கப்பட்டுள்ளன. முதலாவது மற்றும் இரண்டாவது சுற்றுகள் ‘ஒன்லைன்’ மூலமாக நடாத்தப்படும். மூன்றாவதும் மற்றும் நான்காவதும் (அரையிறுதி மற்றும் இறுதிச் சுற்றுகள்) புதுடெல்லியில் நடாத்தப்படும்.

முதல் இரண்டு சுற்றுகளிலிருந்தான முதல் 10 வெற்றியாளர்களும் புதுடெல்லியில் மூன்றாவது (அரையிறுதி) மற்றும் நான்காவது (இறுதிச் சுற்று) சுற்றுகளுக்கு புதுடெல்லியில் பங்குபற்றுவதற்கு அழைக்கப்படுவர். அவர்கள் இந்தியாவில் ஒரு 15 நாட்கள் சுற்றுலாவிற்கும் அழைத்துச் செல்லப்படுவார்கள். இறுதி வெற்றியாளர்களுக்கு தங்க/வெள்ளி/வெண்கல பதக்கங்கள் வழங்கப்படும். ஏதேனும் விளக்கங்களுக்கு, கீழ் வரும் மின்னஞ்சல் முகவரிக்கு எழுதவும் cons.colombo@mea.gov.in.

*****

கொழும்பு
23 ஆகஸ்ட் 2018